# தமிழ் இலக்கியங்களில் கல்வி

*முனைவர் க. லதா*
தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, மதுரை

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மே

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8991

கல்வி என்பது மனத்தைப் பண்படுத்துவது, நல்லொழுக்கங்களைப் பெற்றுத் தருவது. குழந்தைகள் உடல் வளர்ச்சியோடு மன வளர்ச்சி பெற உதவுவது. இளந்தலைமுறையினரை நெறிப்படுத்தி நல்லதொரு சமுதாயம் உருவாக இன்றியமையாத கருவியாகச் செயல்படுவது. மனிதனை ஒரு முழுமையான மனிதனாக மாற்றுவது. அவன் ஒரு தத்துவ மேதையாகவோ, ஒரு படைப்பாளனாகவோ, திறமை மிக்க ஆசிரியராகவோ வளரவேண்டுமானால் அவனுக்குக் கல்வி மிக அவசியம். மனிதர்கள் தாங்கள் எண்ணிய இலக்கினை அடைய, கல்வியே அவர்களுக்கு வழிகாட்டும். இத்தகைய கல்வியறிவு தமிழகத்தைப் பொறுத்தவரை, வாளொடு முன்தோன்றி மூத்த குடியான தமிழ் மக்களுக்கு, அத்தொல் குடிகளுக்கு பண்டைக் காலம் முதலே இருந்தது என்பதற்குக் கல்வெட்டு, சுவடிகள் முதலான ஆதாரங்கள் சான்று பகர்கின்றன. தொடர்ந்து இலக்கியங்களிலும் அதற்கான பதிவுகள் உள்ளன. அவ்வகையில் பருந்துப் பார்வையாக, தமிழ் இலக்கியங்களில் காணப்படும் கல்விச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

உலகம் முழுவதும் கல்வியின் இன்றியமையாமை பரவலாகப் பேசப்படுகிறது. எனினும் இன்றைய இளந் தலைமுறையினருக்கு மாற்றுக் கல்வி தேவைப்படுகிறது என்பது மறுக்க இயலாத உண்மை. சான்றாக, பின்லாந்து நாட்டுக் கல்விமுறை என்பது, 'சுகல்வி வாழ் நாள் முழுவதற்கும் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன் வைப்பதாக அமைகிறது. அதாவது கல்வி என்பது நடைமுறைக் கல்வியாக இருக்க வேண்டும், நடைமுறை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பன போன்ற கருத்தாக்கங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஜப்பான் மொழியில் எழுதப்பட்ட “டோட்டோ-சான்: ஜன்னலில் ஒரு சிறுமி (Totto & Chan : The Little Girl at the Window)” என்ற சுயசரிதை நூல் உலகப் புகழ்பெற்ற ஒன்று. இந்நூலை எழுதியவர் டெட்சுகோ குரோயாநாகி என்பவர். இந்நூல் 45 லட்சம் பிரதிகள் விற்கப்பட்ட பெருமையும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறப்பும் கொண்டது. இந்த நூல் பல நாடுகளில் கல்வி முறைகளிலும் கற்பித்தல் முறைகளிலும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பயன்படுத்தப்படாத ரயில் பெட்டிகளில் வகுப்பறைகள், களப்பயண வழியில் அறிவு பெறுதல் எனக் குழந்தைகள் விரும்பும் வகையில் கல்வியறிவு பெறும் முறையை அச்சுயசரிதை நூல் விளக்கிக் காட்டியது. குழந்தைகள் அனைவரும் நல்லியல்புகளுடன் தான் பிறக்கின்றனர். ஆனால் அவர்கள் வளரும் சூழலும் பெரியவர்களின் தாக்கமும் தான் அவர்களுடைய இயல்புகளைச் சிதைக்கின்றன. அவர்கள் தங்கள் தனித்தன்மையுடன் வளர அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே இந்த நூலின் மையப்புள்ளியாகும்.

இத்தகைய கருத்தாக்கங்களுக்கு முன்பே கல்வியின் முக்கியத்துவத்தை தமிழ் இலக்கிய இலக்கணங்கள் முன் வைத்துள்ளன. அத்துடன் கல்வியறிவு பெற்ற தமிழினத்தின் பெருமைகளையும் அவை பறை சாற்றுகின்றன. பால்பாகுபாடின்றி ஆண்களும் பெண்களும் கல்வியறிவு பெற்றுச் சிறந்திருந்தனர் என்பதற்குச் சங்கப் புலவர்களே சான்று. அத்துடன் "மன்னவன் எவ்வழி மக்கள் அவ்வழி" என்பது போல மன்னர்கள் கல்வியில் சிறந்திருந்து, மக்களையும் கல்வியறிவு பெற வலியுறுத்தினர் என்பதைக்,

**"கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே"**
**(புறம். 183)**

என்று ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் பாடி தன் மக்கள் நெறிப்படுத்தி உள்ளான்.

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**(புறம். 312)**

என்ற தொடரும் கூட, பொருளாதாரப் பின்புலமோ தொழில் முறைப் பின்புலமோ ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுப் பின்புலமோ இவை போன்ற சூழலிலும் கூட ஆண், பெண் வேறுபாடின்றி ஒவ்வொரு வீட்டிலும் தாயும் தந்தையும் கல்வியில் சிறந்திருந்ததையே சுட்டுகிறது.

குறுந்தொகையில் இடம்பெறும்,

**அன்னாய் இவனோர் இளமாணாக்கன்**
**(குறுந். 33)**

என்ற தொடர் ஒரு பாணனைக் குறித்து வருவது. எனினும் மாணாக்கன் என்ற சொல் இளைய மாணவன் என்ற பொருள் தருகிறது. சங்க அகப்பாடல்களைப் பொறுத்தவரை கல்வி என்பது வெறும் அறிவு பெறுதல் மட்டுமல்ல. ஒழுக்கம், பண்பாடு, சமூக விழுமியங்கள் போன்றவற்றைக் கற்றறிந்து வாழ்வது என்ற சிந்தனையைக் கொண்டிருந்தது. அற இலக்கியங்களைப் பொறுத்தமட்டில்,

**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**
**(ஔவை : கொன்றைவேந்தன் : 7)**

என்ற அவ்வை மொழியும் எண்ணென்ப ஏனை எழுத்தென்ப (குறள். 392) என்ற வள்ளுவரின் வாய்மொழியும் கல்வியைக் கண்களாகப் போற்ற வேண்டும், தமிழர்கள் அவ்வாறே போற்றி வாழ்ந்தனர் என்ற உண் மையைப் புலப்படுத்துகின்றன. மேலும் அற இலக்கியங்கள் பெரும்பான்மையும் கல்வி குறித்த சிந்தனைகளைப் பெரும் பான்மையும் பதிவிட்டுள்ளன.

பக்தி இலக்கியங்கள் பதிகம், அகவல், வெண்பா போன்ற இலக்கிய வடிவங்களில் வெளிவந்துள்ளன. சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய சமய மடங்களில் கல்வி கற்பிக்கப்பட்டது. சமயக் கருத்துகள், தத்துவம் தாக்கம், இலக்கணம், காவியம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

காப்பியங்களுள் சிலம்பும் மணிமேகலையும் ஒழுக்கநெறிக்கல்வி, நடனம், அறம் முதலிய கல்விகளை முதன்மைப்படுத்துகின்றன. நாடகம், கேள்விக் கல்விகளிலும் அற்றைத் தமிழ் மக்கள் சிறந்திருந்ததைப் பதிவு செய்துள்ளன. சீவகன் அனைத்துக் கலைகளிலும் தேர்ந்திருந்ததைச் சிந்தாமணி புகழ்கிறது. "கல்வியிற் பெரியன் கம்பன்" என்ற தொடர் பானைச் சோற்றில் பதச்சோறு.

சிற்றிலக்கியங்களில் காணப்படும் புலவர்களுக்கிடையே நடைபெற்ற

சொற்போர்கள் அக்காலகட்டத்துப் புலவர் பெருமக்களிடையே காணப்பட்ட புலமையை வெளிக்காட்டுகிறது.

மறுமலர்ச்சி இலக்கியங்கள் பல்வகையில் கல்விச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. உரைநடை, புனைகதை, நாடகம், மரபு மற்றும் புதுக்கவிதைகள் அதற்குப் பிறகு தோன்றிய சென்ரியு கவிதைகள் லிமரிக்கூ கவிதைகள் என அனைத்து வகை இலக்கிய வகைகளும் யாதானும் ஒரு வகையில் கல்விச் சிந்தனைகளைக் கொண்டமைந்துள்ளன. உ.வே.சா. என்கின்ற ஒரு மாமனிதன் இல்லையேல் இலக்கியங்கள் தமிழ்ச் சமூகத்துக்குக் கிடைத்திரா. நாடகங்கள், புனைகதைகள், கவிதைகள் வழி, படைப்பாளர் பலரும் கல்விச் சிந்தனைகளைப் புகுத்தியுள்ளனர்.

"கல்வி சிறந்த தமிழ்நாடு" எனப் பாரதி கல்வியின் பெருமை பேசுகிறார். "தேடு கல்வி" என்ற பாரதியின் தொடர் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அதுபோல,

***"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்***
***. . . . . . . . . . . . . . . . . .. . . . . . .. .***
***அனையாவினும் புண்ணியம் கோடி***
***ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"***
***(பாரதியார் கவிதைகள்)***

என்ற பாரதி கூற்று கல்வியின் மகத்துவத்தை விளக்குகிறது. பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற, பார்வைபெறக் கல்விதேவை என்கிறார் தாசன்.

கல்வியின்மை என்பது ஒரு சமூகச் சிக்கல் என்பதைப்புதினங்கள்எடுத்துரைக்கின்றன. அத்துடன் கல்வியின் முக்கியத்துவத்தைப் பல படைப்பாளிகள் பதிவு செய்வதுடன் கல்வி குறித்த விவாதங்களைக் கேள்விக் குள்ளாக்குகின்றனர். கல்கி போன்ற வரலாற்றுப் புதின ஆசிரியர்கள் கல்வி குறித்த விழிப்புணர்வு, சிறப்புகளைப் பதிவிட்டுள்ளனர்.

புற அழகு ஒரு பொருட்டே இல்லை. கல்வியே சிறந்த அழகு. அதுவே அறியாமையைப் போக்கி அறிவைப் பெருக்குவது; எக்குடியில் பிறப்பினும் கல்வியில் சிறந்தோரே உயர் குலத்தோர்; பிறரால் கவர இயலாத அழிக்க இயலாத செல்வம் கல்வியே; கல்விக்கு இறுதி என்ற ஒன்று இல்லை என்றெல்லாம் கல்விக்குப் பல பெருமைகள் உண்டு. இப்பெருமைகளைத் தண்டமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் அவ்வக் காலத்துக்கேற்ற நடையில் வடிவத்தில் பதிவு செய்துள்ளன. ஆயுதங்கள் சுமந்து சென்று போரில் பிறர் உயிர் பறிக்க எண்ணும் மனிதர்களையும் பக்குவப்படுத்துவது, பண்படுத்துவது கல்வியே.

இப்பூவுலகு அமைதி வழியில் நடை போட வேண்டுமாயின் புத்தகத்தைத் துணைக் கொண்டால் போதும், அதற்குக் கல்வியறிவு மிகத்தேவை. ஏனெனில் இக்கல்வியறிவுதான் ஆயிரம் நண்பர்களுக்கு ஈடான புத்தகத்தை, நூலை நட்பாக்குகிறது. இவ்வாறு தெளிந்த அறிவுடன் மனிதர் வாழ தமிழிலக்கியங்கள் கல்வியைத் துணைக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றன.